

சிவகங்கை மாவட்டம் ஒக்கூர் புதூரில் முதல்வர் துவக்கி வைத்த தாயு மானவர் திட்டத்தின் கீழ் 70 வயது முத்த குடிமகன் பழனியப்பன் வீட்டிற்கு சென்று கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் நேரில் சென்று வழங்கி வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதிகா.பொற்கொடி, கூட்டுறவு இணைப்பதிவாளர் ராஜேந்திர பிரசாத் மற்றும் அலுவலர்கள் உள்ளார்கள்.





வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நேற்று (12.08.2025) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத் துறை வளாகக் கூட்டரங்கில் 2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் வரையிலான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், வணிகவரி ஆணையர் எஸ்.நாகராஜன், இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி மொ.நா. பூங்கொடி மற்றும் வணிகவரி உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா, திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா, கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க கூட்டம் ஆகிய முப்பெரும் விழா மாபெரும் பொதுக்கூட்டம் நெல்லை மத்திய மாவட்டம் தச்சநல்லூர் சாவடிதிடலில் தச்சை வடக்கு பகுதி தி.மு.க சார்பில் பகுதி செயலாளர் சங்கர் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வு மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. முன்னாள் அமைச்சர் மைதீன் கான்,தலைமை கழக பேச்சாளர் சூர்யா வெற்றி கொண்டான்,முத்துச்செல்வி, விஜிலாசத்யானந்த், ராமகிருஷ்ணன், சுரேஷ், பெருமாள், கிரிஜாகுமார், சுப்பிரமணியன், தினேஷ், கருப்பசாமி கோட்டையப்பன், ராஜ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி யில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமையில் மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் முன்னிலையில் மாநகர மேயர் செயற்குழு உறுப்பினர் எஸ்.முத்துதுரை , மாநகர துணை செயலாளர் சொ.கண்ணன் உட்பட நிர்வாகிகள் மரியாதை செலுத்தினார்கள்.



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் தலைவர் கலைஞர் அவர்களின் 7வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் வே.பூபாலசிங்கம் தலைமையில் நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

## நாடாளுமன்றத் தேர்தலில்

# தி.மு.கழக கூட்டணி 234 தொகுதிகளிலும் வெற்றி பெறும்!

## நெல்லையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேட்டி

நெல்லை.ஆக.13-

பாராளுமன்ற தேர்தலின் போது எட்டு முறை பிரதமர் வந்தார்.நாங்கள் 40க்கும் 40 வெற்றி பெற்றோம்,பத்து முறை அவர் வந்தால் 234 தொகுதியிலும் நாங்களே வெற்றி பெறுவோம்,எடப்பாடி பழனிச்சாமி சருக்கி விழுந்து பல மாதங்கள் ஆகிவிட்டது அவர் இனிமேல் எந்திரிக்க முடியாது.என நெல்லையில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களிடம் தெரிவித்தார் .

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் நெல்லை வண்ணார் பேட்டையில் உள்ள அலுவலகத்தில் அண்ணா அறிவகம் (District Firewall) திறப்பு விழா நிகழ்வு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது.இந் நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்பு அழைப்



பாளராக பங்கேற்று அண்ணா அறிவகத்தை துவக்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களிடம் அளித்த பேட்டி வருமாறு.

எடப்பாடி பழனிசாமி சருக்கி விழுந்து பல மாதங்கள் ஆகிவிட்டது அவர் இனிமேல் எந்திரிக்க முடியாது. அவர் சருக்கு மரம் ஏறிவிட்டார் இறங்குவது எப்படி என்று தெரியாமல் முழித்துக் கொண்டிருக்கிறார்.

தி.மு.க கூட்டணி உடைந்து விடும் என 2019ல் இருந்து சொல்லிக் கொண்டே தான் இருக்கிறார்கள்.அ.தி.மு.க கூட்டணியிலிருந்து ஒவ்வொருவராக உருவி கொண்டிருக்கிறார்கள்.

அ.தி.மு.க.வின் முக்கிய நிர்வாகிகள் ஒவ்வொருவராக தி.மு.க.விற்கு வந்து கொண்டிருக்கிறார்கள். தி.மு.க கூட்டணி மிகவும் பலமாக உள்ளது. தி.மு.க.வின் பலம் நாளுக்கு நாள் கூடிக் கொண்டிருக்கிறது. எடப்பாடி பழனிசாமி யின் இந்த சுற்றுப்பயணம் முடித்த உடன் மேலும் சிலர் தி.மு.க.விற்கு வந்து விடுவார்கள்.எங்கள் கட்சிக்கு வருவோருக்கு இடம் கொடுக்க முடியவில்லை. எங்கள் கட்சிக்கு வந்தவரை என்ன செய்வதென்று தெரியாமல் முழிக்கிறோம்.

பாராளுமன்ற தேர்தலின் போது எட்டு முறை பிரதமர் வந்தார் நாங்கள் 40க்கும் 40 வெற்றி பெற்றோம்.பத்து முறை அவர் வந்தால் 234 தொகுதியிலும் நாங்களே வெற்றி பெறுவோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலைராஜா, மாநில நெசவாளர் அணி செயலாளர்பெருமாள்,

தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீத்தாராமன், மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், நெல்லை தொகுதி பார்வையாளர் முத்துச்செல்வி, தலைமைக்கழக பேச்சாளர் சூரியாவெற்றி கொண்டான்,

மத்திய மாவட்ட துணை செயலாளர் சுரேஷ், கிரிஜா குமார்,மாநகர பொறுப்பாளர் கிழக்கு தினேஷ்,தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் காசிமணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## டாக்டர் சங்கர் ஏற்பாட்டில் நெல்லை மத்திய மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

## ஆர்.எஸ்.பாரதி – சூர்யா வெற்றி கொண்டான் – மு. அப்துல்வகாப்எம்.எல்.ஏ. – டி.பி.எம்.மைதீன்கான்சிறப்புரை!

நெல்லை.ஆக.13-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க தச்சநல்லூர் வடக்கு பகுதி தி.மு.க சார்பில்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் பிறந்தநாள் விழா,திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க கூட்டம் ஆகிய முப்பெரும் விழா மாபெரும் பொதுக்கூட்டம் தச்சை வடக்கு பகுதி செயலாளர் டாக்டர் சங்கர் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வு மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா தலைமையில் மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜு மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்,வண்ணை சேகர், பூ.சுப்பிரமணியன், மூளிகுளம் பிரபு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மத்திய மாவட்ட துணை செயலாளர் எஸ்.வி.சுரேஷ் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி,தலைமை கழக பேச்சாளர் சூர்யா வெற்றி கொண்டான் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

முன்னதாக நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன்கான்,தலைமை கழக பேச்சாளர் சூர்யா வெற்றி கொண்டான், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், நெல்லை தொகுதி பார்வையாளர் முத்துச்செல்வி ஆகியோர் உரையாற்றினர்.

தமிழகம் முழுவதும் அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணம் மேற்கொண்டு பிரச்சாரம் செய்து வருகிறார்.அவரது பிரச்சாரத்திற்கு பின் தி.மு.க.வாக்கு வங்கி அதிகரித்து வருகிறது. ஒவ்வொரு கூட்டத்திலும் 10 பொய்யாவது சொல்ல வேண்டும் என்ற சத்தியத்தோடு அவர் கூட்டத்தை நடத்தி வருகிறார். அ.தி.மு.க.வின் அடிமட்ட தொண்டர்கள் மிகவும் மன உளைச்சலில் உள்ளனர். அ.தி.மு.க.பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்த பின்னர் மிகவும் அ.தி.மு.க. தொண்டர்கள் சோர்வடைந்து விட்டனர். உலகிலேயே எந்த கட்சியும் செய்யாத அளவில் மாபெரும் உறுப்பினர் சேர்க்கை முகாமை ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற திட்டத்தின் மூலம் தி.மு.க செய்து வருகிறது.இதனை ஏற்றுக்கொள்ள முடியாமல் எடப்பாடி பழனிசாமி எதை யெதையோ சொல்லி வருகிறார்.

தி.மு.க.வை பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆரம்பிக்கும்போது 5 லட்சம் உறுப்பினர்கள் தி.மு.க.வில் இருந்தனர். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் காலத்தில் 50 லட்சமாக அது மாறியது. இப்போது ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற திட்டம் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட 30 நாட்களில் ஒரு கோடி பேரை சேர்த்து தி.மு.க.மிகப்பெரிய சாதனையை படைத்துள்ளது.நான்காண்டு கால ஆட்சியின் சாதனையை பார்த்து பல்வேறு கட்சியில் இருந்து தி.மு.க.வை நோக்கி படையெடுத்து வருகிறார்கள். ஊழலுக்காக கலைக்கப்பட்ட கட்சி தி.மு.க என ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும் எடப்பாடி பழனிச்சாமி சொல்லி வருகிறார் உண்மை தெரியாமல் அவர் பேசி வருகிறார்.எமர்ஜென்சி காலத்தில் தி.மு.க தலைவராக இருந்த கலைஞர் அவர்கள் பல்வேறு இன்னல்களை அனுபவித்தார். நாட்டில் எமர்ஜென்சி அறிவிக்கப்பட்ட போது நாடு முழுவதும் பல தலைவர்கள் கைது செய்யப்பட்டனர் 10 சிண்டிகேட் உறுப்பினர்களை கொண்ட காங்கிரஸ் கட்சியில் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர்.தமிழகத்தில் காமராஜர் மட்டும்தான் கைது செய்யப்படாமல் இருந்தார்.காமராஜரை கைது செய்ய வேண்டும் என இந்திரா காந்தியால் உத்தரவு வெளியிடப்பட்டதை அதிகாரிகள் முன்னாள் முதலமைச்சர் கலைஞரிடம் தெரிவித்தார்கள். ஆனால் அதனை ஏற்க மறுத்து தனது ராஜினாமா கடிதத்துடன் முன்னாள் காமராஜரை நேரில் சந்தித்து அந்த தகவலை தெரிவித்தார்.உங்களை கைது செய்ய சொல்லி இருக்கிறார்கள் அதனை நான் எப்படி செய்வேன் என்று ராஜினாமா கடிதத்தை முன்னாள் முதலமைச்சர் கலைஞர் காமராஜரிடம் காட்டினார்.அதற்கு பதில் அளித்த காமராஜர் உங்கள் ஆட்சி நடப்பதால் தான் நான் இதுவரை கைது செய்யப்பட வில்லை என சொல்லி கலைஞரை கட்டி அணைத்து கண்ணீர் மல்க தெரிவித்தார். காமராஜரை கைது செய்யப்படாததை மனதில் வைத்து இந்திரா காந்தி எமர்ஜென்சி காலத்தில் தி.மு.க ஆட்சியை கலைத்தார்.ஆனால் இதெல்லாம் தெரியாமல் ஊழலுக்காக தி.மு.க ஆட்சி கலைக்கப்பட்டதாக எடப்பாடி தொடர்ந்து பேசி வருகிறார்.

காமராஜர் உயிரிழந்த போது காங்கிரஸ் கட்சியில் இருந்த கோஷ்டி பூசலால் அவர் எங்கு அடக்கம் செய்யப்பட வேண்டும் என முடிவெடுக்காமல் இருந்ததை அறிந்து காந்தி மண்டபத்தின் அருகே அரசு மரியாதையுடன் காமராஜர் உடல் அடக்கம் செய்யப்படும் என முதல்வராக இருந்த போது கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார். ஊழலுக்காக தி.மு.க ஆட்சி கலைக்கப்பட்டு இருந்தால் 1977 87 காலகட்டத்தில் 10 ஆண்டுகள் முதல்வராக இருந்த எம. ஜி.ஆர்.தி.மு.க மீது ஊழலுக்காக ஒரு வழக்கு கூட பதிவு செய்யவில்லை.இந்திரா காந்திக்காக கருப்பு கொடி காட்டியதற்கு தி.மு.க மீதும் கலைஞர் மீதும் வழக்கு போட்டு வழக்கை நடத்தியவர் எம்.ஜி.ஆர்.எங்கள் மீது அவ்வளவு கோபத்தில் இருந்தவர் ஊழலுக்காக எங்கள் மீது ஒரு வழக்கு கூட போட்டிருக்க மாட்டாரா?முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ஊழல் செய்ததற்காக நான்காண்டுகள் மட்டும் தான் சிறை தண்டனை கிடைத்தது எடப்பாடி பழனிசாமி கொலை குற்றவாளி.இருவரை கொலை செய்தவர். அவர் மீது சங்ககிரி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு செசன்ஸ் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது அவரை கொலை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக சாட்சியங்களை பிறழ் சாட்சியாக செங்கோட்டையன் மாற்றினார்.கொலை வழக்கில் பிறழ் சாட்சியங்கள் அளிக்கப்பட்டு ஒருவர் விடுதலை செய்யப்பட்டால் இந்த வழக்கு மேல்முறையீடு செய்யப்பட வேண்டும் ஆனால் அதனை செய்யவிடாமல் செங்கோட்டையன் தடுத்து எடப்பாடி பழனிச்சாமியை காப்பாற்றினார். இப்படி பல உதவி செய்த செங்கோட்டையன்

அவருக்கு பதவி வழங்கிய சசிகலா ஏன் அவரை வளர்த்து விட்ட எம்.ஜி.ஆர். ஜெயலலிதா உள்ளிட்டோருக்கு எடப்பாடி பழனிச்சாமி துரோகம் செய்து தூக்கி எறிந்து விட்டார். 1500 கோடி ஊழல் செய்த வழக்கு எடப்பாடி பழனிச்சாமி மீது நிலுவையில் தான் உள்ளது.எப்போது வேண்டுமானாலும் அவர் வழக்கு தூசி தட்டப்படும் ரொம்ப வாலாட்டினால் வேறு மாதிரி ஆகிவிடும்.அ.தி.மு.க ஆட்சியில் அனைத்தும் சிறப்பாக செய்துவிட்டேன் என சொல்லும் எடப்பாடி பழனிச்சாமி

அ.தி.மு.க ஆட்சியில் ஜெயலலிதா பெயரால் தொடங்கப்பட்ட பல்கலைக் கழகத்திற்கு அவரது பெயரை வைக்க முடியவில்லை ஆட்சிக்கு வந்த பிறகு வழக்கு தொடர்ந்து ஜெயலலிதா பெயரால் தொடங்கப்பட்ட மீன்வள பல்கலைக்கழகத்திற்கு மீண்டும் பெயர் வைக்க அனுமதி வாங்கி கொடுத்தது தற்போதைய திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்பதை யாரும் மறந்து விட முடியாது. எந்தவிதமான முறையான அனுமதியும் இல்லாமல் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் சிலை ராணி மேரி கல்லூரியில் திறக்கப்பட்டது. தி.மு.க ஆட்சி அமைத்த பின்னர் அந்த சிலைக்கு அனுமதி இல்லை அதனை எடுக்க வேண்டும் என முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு வந்தனர். அதிகாரிகள் எந்த விதமான ஆட்சேபனையும் செய்யாமல் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் சிலைக்கு அனுமதி வழங்கி முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவரை கௌரவப்படுத்தினார்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேசினார்.

நிகழ்வில் மத்திய மாவட்ட துணை செயலாளர் கிரிஜா குமார்,மாநகர செயலாளர் கிழக்கு தினேஷ்,மாநகர துணை செயலாளர் சுதா மூர்த்தி, பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன், சாமுவேல்,ஒன்றியச் செயலாளர் அருள்மணி, கடையநல்லூர் தொகுதி பார்வையாளர் நௌஷாத்,மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் கருப்புசாமி கோட்டையப்பன்,வட்ட செயலாளர்கள் கணேசன்,பச்சிராஜன், சடாமுனி,முத்துராமன்,மேகை செல்வம், சிந்து முருகன், கிருஷ்ணன், ஆவின் கல்யாணசுந்தரம், லெனின் உள்பட கழக நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் சின்னமனூர் மேற்கு ஒன்றிய குச்சனூர் பேரூர் தி.மு.க.வின் சார்பில் தேனி வடக்கு மாவட்ட செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் ஆலோசனையின் படி சின்னமனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் கண்ணியம்பட்டி முருகேசன் முன்னிலையில் குச்சனூர் தி.மு.க. பேரூர் செயலாளர் திலீப் குமார் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அண்ணா திடலில் அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. உடன் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.